DINAMALAR-20-MAR-2020

# 'தினக்கூலி தொழிலாளர்களுக்கு உணவளிப்பது சமூக பொறுப்பு'

**கோவை, மார்ச் 20–**

'கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால், வேலையிழந்து தவிக்கும் தினக்கூலி தொழிலாளர்களுக்கு உணவு அளிக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பு' என்று, ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவு: தினக்கூலி தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது, கொரோனா வைரஸ் பாதிப்புகளில் மிக மோசமான ஒன்றாகும். உணவின்றி அவதியுறுவது, உள்நாட்டு சண்டைகளுக்கும், இறப்புகளுக்கும் வழி வகுக்கும். அவர்களுக்கு தினசரி உணவையேனும் வழங்குவது, இந்த சமூகத்தின் பொறுப்பு. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து, கொரோனா வைரஸ் பரவுவதை முறியடிப்போம்.

இவ்வாறு, சத்குரு தெரிவித்துள்ளார்.